# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8082806

C

1. District : Coimbatore PS: Vd AC Year: 2024 FIR No.: 03/2024/AC/CB Date: 07.06.2…
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: PC ACT 1988 as amended by the PC Act 2018 Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்: Sec. 7.
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 6.6.24 Date to : 1630 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 7.6.24 Time : 09.40 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 7.6.24 Time : 09.40 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral : Tamil Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o Fire & Rescue services, Kovaipudur, at about 14 Kms West
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. Karuppusamy (b) Father's/ Husband's Name : S/O. K. Senniappa…
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 63/24 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Business (g) Address : D/No: 17, Dhanalakshmi Nagar Extn., Siddhapudur, Coimbatore
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Sivaraj, Station Fire Officer, Fire & Rescue Services, Kovaipudur, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— No delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………..on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………….. பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………………. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

C. Latha 07/06/2024

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

[signature] 7/6/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

07.6.2024 at 1100hrs

Name: பெயர் C. LATHA
Rank: நிலை Inspector of Police, VRAC, Coimbatore No. எண் ……

கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2024/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி–

இன்று 07.06.2024 ஆம் தேதி வெள்ளிகிழமை காலை 09.40 மணிக்கு கோவை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.லதா ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது கோவை மாநகர், சித்தாபுதூர், தனலட்சுமிநகர் விரிவு, கதவு.எண்.17 ல் வசிக்கும் சென்னியப்பன் என்பவரது மகன் திரு.S.கருப்புசாமி, என்பவர் கணினியில் தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகாரினை கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம் பின்வருமாறு – அனுப்புநர் S.கருப்புசாமி, வயது-63, த/பெ.சென்னியப்பன், கதவு.எண்.17, தனலட்சுமி நகர் விரிவு, சித்தாபுதூர், கோவை–641044. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கோவை. அய்யா, நான் மேற்கண்ட விலாசத்தில் இரண்டாவது தளத்தில் எனது குடும்பத்துடன் கடந்த 30 வருடங்களாக வசித்து வருகிறேன். அதே கட்டிடத்தில் தரைதளத்தில் நானும் எனது மகன் S.K.நவீன் ஆகியோரும் சேர்ந்து M/s.Gem Precision Tool Pvt Ltd என்ற பெயரில் தொழில் நிறுவனத்தை நடத்தி வருகிறோம். மேற்படி தொழிலை விரிவுபடுத்த வேண்டி குறிச்சி சிட்கோ தொழிற்பேட்டையில் சுமார் 50 செண்ட் உள்ள பிளாட் எண்.E 55 C –ஐ மேற்படி நிறுவனம் பெயரில் அரசாங்கத்தால் ஒதுக்கீடு செய்து கிடைக்கப்பெற்றோம். தற்சமயம் மேற்படி இடத்தில் தொழிற்சாலை கட்டிடம் கட்டுவதற்காக தீயணைப்பு துறையின் தடையின்மை சான்று பெறுவதற்காக எனக்கு தெரிந்த கன்சல்டண்ட் திரு.திலக் என்பவர் மூலம் TNSWP.Com என்ற Portal- ல் 14.05.2024 ஆம் தேதி இணையவழி மூலம் உரிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பம் செய்தேன். மேற்படி இணையதள வழி மூலமாக நான் விண்ணப்பித்ததின் பேரில் கோவைப்புதூரில் உள்ள தீயணைப்பு துறை அலுவலகத்தில இருந்து நிலைய அலுவலர் திரு.சிவராஜ் என்பவர் கட்டிடம் கட்டும் இடத்தை கள ஆய்வு செய்வதற்காக கடந்த இரண்டு வாரம் முன்பு வருவதாக கன்சல்டண்ட் திரு.திலக் என்பவர் மூலம் தெரிவித்ததின் பேரில் நான் எனது மகன் நவீனை அனுப்பி வைத்தேன். மேற்படி இடத்தை கள ஆய்வு செய்த பிறகு நிலைய அலுவலர் திரு.சிவராஜ் அவர்கள் எனது மகனிடம் தான் தடையின்மை சான்றிற்கு மாவட்ட அலுவலர் அவர்களுக்கு பரிந்துரை செய்து விடுவதாகவும், மேற்படி தடையின்மை சான்றிதழை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏற்பாடு செய்து விடுவதாகவும் அதன் பிறகு தன்னை நேரில் சந்தித்து மாவட்ட அலுவலர் அவர்கள் கையொப்பமிட்ட அசல் தடையின்மை சான்றிதழை பெற்று கொள்ளுமாறும்

கூறியுள்ளார். அதன் விபரத்தை எனது மகன் நவீன் என்னிடம் சொன்னார். கடந்த 03.06.2024 ஆம் தேதி இணையதள வழி மூலமாக தொழிற்சாலை கட்டிடம் கட்ட தடையின்மை சான்று ஆனது தீயணைப்பு மீட்பு பணித்துறை, மாவட்ட அலுவலர் அலுவலகம் மூலம் பதிவேற்றம் செய்யப்பட்டதை எனது மகன் நவீன் பார்வையிட்டு இணையதளம் மூலமாக பதிவிறக்கம் செய்து கொண்டார். அதன் விபரத்தை எனது கன்சல்டண்ட் திரு.திலக் என்பவரிடம் கூற கோவைப்புதூர் தீயணைப்பு துறை அலுவலக நிலைய அலுவலரை அணுகி அசலை பெற்று கொள்ளுமாறு கூறினார். அதற்கு நான் ஏற்கனவே இணையதளத்தில் தடையின்மை சான்று ஆனது பெறப்பட்டு விட்டது என்று சொன்னதற்கு அவர் என்னிடம் கட்டிடம் அனுமதி வாங்க அசல் தடையின்மை சான்றிதழ் கட்டாயமாக வேண்டுமென்று கூறினார். நான் பிசியாக இருந்ததால் தீயணைப்பு துறை அலுவலகத்திற்கு நேரடியாக செல்ல முடியவில்லை. நேற்று 06.06.2024 ஆம் தேதி மதியம் திரு.திலக் என்னை தொடர்பு கொண்டு, கோவைப்புதூர் தீயணைப்பு நிலைய அலுவலர் திரு.சிவராஜ் அவர்கள் அழைத்ததாகவும் உடனடியாக வந்து தடையின்மை சான்றிதழின் அசலை விண்ணப்பதாரையே நேரில் வந்து பெற்று கொள்ளுமாறு கூறியதாகவும் சொன்னார். அதன்பேரில் நான் நேற்று 06.06.2024 ஆம் தேதி மாலை சுமார் 04.30 மணிக்கு கோவைப்புதூரில் உள்ள தீயணைப்பு துறை அலுவலகத்ததில் இருந்த நிலைய அலுவலர் திரு.சிவராஜ் அவர்களை நேரில் சென்று சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம் நான் உங்களுடைய வேலையை திரு.திலக் சொன்னதன் பேரில் சீக்கிரமாக முடித்து கொடுத்து விட்டேன், இல்லையென்றால் இரண்டு மூன்று மாதங்கள் தாமதப்படுத்தியிருப்பேன் என்றும், தான் பரிந்துரை செய்ததற்கும், அசல் சான்று தருவதற்கும் தனக்கு பணம் ரூ.20,000/– கொடுக்குமாறு கூறினார். அதற்கு நான் இவ்வளவு பணம் ஆகுமா சார் என்றும், தற்போது அவ்வளவு பணம் கொண்டு வரவில்லையென்றும் சொன்னேன். அதற்கு அவர் உங்களுக்குத்தான் இவ்வளவு குறைவான தொகையை சொன்னேன் என்றும், இரவு 07.00 மணி சுமாருக்கு சுங்கம் அருகில் தான் வருவதாகவும் அங்கு கொண்டு வந்த பணத்தை கொடுத்துவிட்டு அசல் தடையின்மை சான்றினை பெற்று கொள்ளுமாறும் கூறிவிட்டார். நான் சரி என்று சொல்லி அங்கிருந்து கிளம்பி விட்டேன். பின்னர் நேற்று மாலை சுமார் 06.30 மணிக்கு திரு.சிவராஜ் அவர்கள் அவரது செல்பேசி எண்.8667308110 ல் இருந்து என்னை அழைத்து பணம் ரெடியாகி விட்டதா என்று கேட்டார். நான் பணம் இன்னும் ரெடியாகவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் இன்று 07.06.2024 தேதி காலையில் தனக்கு போன் செய்துவிட்டு தான் சொல்லும் இடத்திற்கு நேரில் வந்து பணத்தை கொடுத்து விட்டு அசல் தடையின்மை சான்றினை பெற்று கொள்ளுமாறு சொல்லி விட்டார். பிறகு நான் எனது மகனிடம் கலந்தாலோசனை செய்து பார்த்ததில் எங்களுடைய தொழிற்சாலை கட்டிடம் கட்டுவதற்காக தேவைபடுகின்ற தீயணைப்பு

துறையின் தடையின்மை சான்றை பரிந்துரை செய்ததற்காக அவர் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.20,000/– ஐ அவருக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே தடையின்மை சான்றை பரிந்துரை செய்ததற்காகவும் மற்றும் அதன் அசல் சான்றை கொடுப்பதற்காகவும் லஞ்சமாக ரூ.20,000/– ம் கேட்கும் கோவைப்புதூர் தீயணைப்பு துறை அலுவலக நிலைய அலுவலர் திரு.சிவராஜ் அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் x/x/x/x/, 07/06/2024 (S.KARUPPUSAMY) இடம் – கோவை, தேதி – 07.06.2024. மேற்படி புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணை மேற்கொண்டதில் இருந்தும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு ஏதுமில்லை என்றும் புகார்தாரரின் புகாரின் உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டு, எதிரியின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பது தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 07.06.2024 ம் தேதி காலை 10.15 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2024/AC/CB u/s.7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 ன்படி மேற்படி எதிரி திரு.சிவராஜ், நிலைய அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள், கோவைப்புதூர், கோவை என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். Respected Sir, Received the complaint on 7.6.2024 at 09.40 hrs Sd/- x-x-x-x 7/6/2024 (C.LATHA), Inspector of Police, V&AC, Coimbatore. Respected Sir, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.03/2024/AC/CB u/s.7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 was registered by me on 07.6.2024 at 10.15 hrs. Sd/- x-x-x-x 7/6/2024 (C.LATHA), Inspector of Police, V&AC, Cbe. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார்மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

7/6/2024

(C.லதா)
காவல்ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.